28th January 1956]

THE HON. SRI C. SUBRAMANIAM : மத்திய சர்க்கார் மானியம் கொடுப்பதை நிறுத்திக்கொள்ளவில்லை. ஆனால் அந்த மானியத்தை சங்கீத நாடக அக்கடமியின் மூலமாகப் பெறவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த உதவியைப் பெருவதற்கு விண்ணப்பமும் போடப்பட்டிருக்கிறது.

SRI S. DAIVASIGAMONEY : இந்தக் கல்லூரியில் சங்கீதம் கற்றுக் கொடுப்பதோடு கூட நடனம் ஆடவும் கற்றுக்கொடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இல்லை.

SRI M. PALANIYANDI : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கிராமீயப் பாடல்களை இந்தக் கல்லூரியில் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் உண்மையிலேயே கிராமீயப் பாடல்களை வளர்த்தால் தான் மக்களுக்கு இசையை அனுபவிக்கும் உணர்ச்சி வளரும். கிராமீயப் பாட்டில் காவடிச் சிந்தை எடுத்துக் கொண்டால், மிகவும் அழகாக நாத நாமக்கிரியை ராகத்தில் பாடலாம். ஆனால் நாதநாமக்கிரியை ராகத்தைப் பற்றியும், கிராமீயப் பாடல்களைக் கற்றுக்கொள்வோர் அறிந்து கொள்வது அவசியம். ஐயர் பாடல்கள், தீட்சதர் பாடல்கள் ஆகிய மிகவும் அற்புதமான சமஸ்கிருத பாடல்களைப் பாடினாலும் அதன் பொருள் புரிந்து கொண்டு அனுபவிக்கக்கூடிய தன்மையில் கிராம மக்களில் பெரும்பாலோர் இல்லை. ஆகவே கர்னாடக சங்கீதத்தோடு கிராமீயப் பாடல்களையும் கற்றுக் கொடுக்க இந்தக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் கிராமீயப் பாட்டின் முக்கியத்துவத்தைப்பற்றி குறைவாகச் சொல்லவில்லை. ஆனால் இந்தக் கல்லூரியில் அதற்கு ஏற்பாடு செய்வது நல்லது அல்ல என்று தான் அபிப்பிராயம் சொன்னேன்.

SRI C. KANDASAMY : இந்தக் கல்லூரியின் தலைவர்கள், உதவியாளர்கள் ஆகியோரை நியமிப்பது அரசாங்கமா ? பப்ளிக் சர்விஸ் கமிஷனா ? அல்லது இவர்களை தேர்ந்தெடுக்க ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இவர்களை நியமிப்பது அரசாங்கம்தான். ஆனால் நியமிப்பதற்கு முன் இத்துறையிலுள்ள பல அனுபவமுள்ளவர்கள் கலந்து கொள்ளப்படுகிறார்கள்.

SRI S. RAMASWAMY NAIDU : கர்னாடக சங்கீதம் என்றாலே மிகவும் பழமையானது என்பதைக் குறிக்கிறது. ஆனால் புதுமையான பெயராக அதற்கு வேறு ஏதாவது பெயர் கொடுக்க சர்க்கார் உத்தேசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : புதுப்பெயரினால் எப்பொழுதும் சங்கடம் வருகிறதே தவிர பிரச்சினை அதன் மூலம் தீர்க்கப்படுவதில்லை. கர்னாடக சங்கீதம் என்றால் என்ன என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆகவே திரும்ப அதற்கு ஒரு புதுப் பெயர் கொடுத்து குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* 3039 *Q.*—(Postponed to Monday.)

K. V. Brothers Beedi Company, Cherpulaserri

* 3040 *Q.*—SRI K. P. GOPALAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state what conciliation measures Government have taken regarding the retrenchment of 18 workers by the management of K. V. Brothers Beedi Company, Cherpulaserri, Walluvanad taluk, Malabar, on 3rd August 1955.

[28th January 1956

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Labour Officer, Kozhikode, enquired into the dispute on 20th August 1955. The parties came to a settlement and the 18 workers who were retrenched on 3rd August 1955 had been reinstated.

Sub-Registrar's Office for Theni town

* 3041 Q.—SRI K. MOOKKIAH THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether the Government have received any representations, dated 2nd, 7th and 26th May 1955 from the public of Theni area in Madurai district in regard to the opening of a sub-registrar's office at Theni town; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI B. PARAMESWARAN : (*a*) & (*b*) The Government have not received the representations under reference but the Inspector-General of Registration received representations on the subject, two in September 1954 and two in May 1955—one dated 2nd May 1955 and the other dated 7th May 1955. A representation, dated 23rd May 1955, was also received by the District Registrar, Madurai. The question of opening a Sub-Registry Office at Theni is now under examination by the Inspector-General of Registration.

MR. SPEAKER : I think there is a mistake. The question (3041) by the hon. Member Sri K. Mookkiah Thevar is put to the Hon. Minister for Revenue.

THE HON. SRI B. PARAMESWARAN : I have already answered the question, Sir. (The Hon. Minister for Revenue : It has since been changed to the Hon. Minister for Religious Endowments and Transport.)

Hobarts' Teachers' Training School for Girls, Madras

* 3042 Q.—SRI S. DAIVASIGAMONEY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Hobarts' Teachers' Training School for Girls, Madras, has hostel accommodation; and

(*b*) if not, whether there is any proposal for opening a hostel in the near future?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) The Accommodation Controller has been addressed to allot a suitable building for the purpose and the hostel will be opened in due course if there is a real need.

SRI S. DAIVASIGAMONEY : Sir, may I know from the Hon. Minister since there is a lot of difficulty experienced by the girls to find accommodation in Madras, whether the Government would take steps at least to rent a suitable building for housing the girls till a hostel is opened?